மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

<u>அசல் வழக்கு எண்.67 /2018</u>

நாள் 27.07.2022

<u>பெயர். ஆறுமுகம் த/பெ. அழகேசன்</u>

<u>வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் சர்வே எண்.367/1 என குறிப்பிட்டு வாங்கினேன். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் சர்வே எண்.367/1எ என குறிப்பிட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.அ.3 அடமான பத்திரத்திலும் சொத்து விவரத்தில் சர்வே எண்.367/1எ விஸ்தீரணம் 22 சென்ட் என காண்பித்துள்ளேன் என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் சொல்லி உள்ள அளவு மற்றும் ஆசீர்வாதத்திடம் இருந்த கிரயம் பெற்ற 50 சென்ட் சேர்த்து நடேசனுக்கு ஒரு ஏக்கரா 10 சென்ட் பாத்தியம். மாணிக்கம் மகன் ஆரோக்கியத்திற்கு சர்வே எண் 367/1ல் 55 சென்ட் பாத்தியமாகும்.

2. வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஆரோக்கியசாமி, லூர்துமேரி, மேரி, லில்லி, ஜெர்சி ஆகியோர் நடேசனின் வாரிசுகள் ஆகும். வா.சா.ஆ.4 கிரய பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரணம் கிரயம் செய்தோம் என்று எனக்கு தெரியாது. வா.சா.,ஆ.5 கிரய பத்திரத்தில் விஸ்தீரமானது ஆசீாவாத்திடமிருந்து கிரயம் பெற்ற 50 சென்ட் மற்றும் மாணிக்கம் என்பவரிடம்இருந்து கிரயம் பெற்ற 55 சென்ட் நான் கிரயம் வாங்கிய 60 சென்ட் ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளார். இளமாறன் மேற்படி சர்வே எண் 367/1ஐ தவிர்த்து வேறு நிலங்களையும் கிரயம் வாங்கி உள்ளார். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ல் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ. 8 வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்து விவரத்தில் சர்வே எண் 367/1ஏ-ல் 22 சென்ட் உட்பட என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.16ல் ரசீதில் கையொப்பம் எதுவும் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா இருக்கிறதா என்றால் பட்டா இல்லை. வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பற்றி

விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அளக்கும்போது 6அடி அகலமும் 120 அடி நீளமும் சேருகிறது என்று கூறி உள்ளார். வழக்கறிஞர் ஆணையருக்கு ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. எனது வழக்குரையில் தாவா சி அட்டவணை சொத்திற்கு ஜக்பந்தி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரயம் வாங்கி உள்ள சொத்தின் ஜக்பந்தியும் வழக்கு சொத்தின் ஜக்பந்தியும் சரியாக இல்லை என்றாலும் அதனால் நான் தாவா சொத்தை குறித்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 மற்றும் வா.சாக.ஆ.5 கிரய பத்திரத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் 7ம் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி